இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 16-10-2024

# பருவத்தே காக்கும் அரசு!

பருவ மழை பெய்யப் போகிறது. அதை முன்கூட்டியே உணர்ந்து பருவத்தே காக்கும் அரசாக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது.

**நிகழாண்டில் வடகிழக்கு பருவமழை இயல்பைவிட அதிகமாகப் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவை அனைத்தையும் முன்கூட்டியே உணர்ந்து திட்டமிடுதல்களைத் தொடங்கியது தமிழ்நாடு அரசு. அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்தார் முதலமைச்சர் அவர்கள். அனை வரையும் ஒரே சிந்தனையில் செயல்பட முடுக்கி விட்டார். இதுதான் முதல் நடவடிக்கையாகும். இது போன்ற காலங்களில் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலமாக மட்டும்தான் எத்தகையச் சூழலையும் எதிர்கொள்ள முடியும். அதேபோல், இது ஒரு குறிப்பிட்ட துறையின் பணியாக மட்டுமில்லாமல், ஒட்டுமொத்த அரசின் பணியாகக் கருத வேண்டும் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்த்தினார்கள்.**

மழையை எதிர்கொள்ள அனைத்து மாவட்டங்களும் தயார் என்று சொல்லத்தக்க வகையில் நிர்வாகக் கட்டமைப்பு தயார் நிலையில் இருக்கிறது. அனைத்துப் பொருட்களும் தடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பொது மக்களுக்கான செயலியை முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்திருந்தார்கள்.

அமைச்சர்களும், மாவட்ட நிர்வாகமும் இப்பணிகளை 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறது. இப்பணிகளைக் கவனிக்க மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் மாவட்டங்களுக்குச் சென்று அனைத்துப் பணிகளையும் முடுக்கிவிட்டுக் கண்காணித்தார்கள். நீர் செல்லும், நீர் வெளியேறும் வழித்தடங்கள் அனைத்தையும் சரிபார்க்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

தேசிய பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை ஆகிய களப்பணியாளர்கள் முன்கூட்டியே பல்வேறு இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் மீட்புப் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மெட்ரோ ரயில் சேவைகளையும் பறக்கும் ரயில் சேவைகளையும் அதிகரிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். பாதிப்புக்குள்ளான பகுதிகளில் வசிக்கும் முதியோர், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை சொல்லப்பட்டுள்ளது.**

**பொதுமக்களை தங்க வைப்பதற்கான நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளது. ரொட்டி, குடிநீர் பாட்டில்கள் ஆகியவை போதுமான அளவுக்கு இருப்பில் உள்ளது. மருத்துவ வசதிகள் முழுமையாக உள்ளன. மருத்துவர்கள் தயார் நிலையில் இருக்கிறார்கள். மாற்றுத் திறனாளிகளுக்கான சக்கர நாற்காலிகள் முதற்கொண்டு தயாராக இருக்கிறது. காய்ச்சல் தடுப்பு முகாம்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.**

பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விட்ட முதலமைச்சர் அவர்கள், தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவன ஊழியர்கள் வீட்டில் இருந்து பணியாற்றலாம் என்ற உத்தரவையும் பிறப்பித்தார். எந்தச் சூழலிலும் எந்தப் பொருளும் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கக் கூடாது என்று உத்தரவிட்டார். அதேநேரத்தில் பொருட்களின் விலை கூடிவிடக் கூடாது என்றும் அறிவுறுத்தினார். ஆவின் பால் தடையின்றி கிடைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மின் உற்பத்தி தடைபடாமல் இருக்கவும், மின் விநியோகம் சீராக இருக்கவும், கட்டுப்பாட்டு மையத்தில் கூடுதலான பணியாளர்கள் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். மீட்புப் பணிகளுக்குத் தேவையான நீர் இறைப்பான்கள், மர அறுப்பான்கள் JCB இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்கள் தயார் நிலையில் இருக்கிறது.

மழை, வெள்ளத்தில் இருந்து மக்களைக் காக்கும் திட்டமிடுதல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகச் செய்து காட்டினார் என்றால், இவை அனைத்தும் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் நேரில் சென்று கண்காணித்து வருகிறார். சென்னை மாநகரில் எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து செப்டம்பர் மாதத்திலேயே பல்வேறு நாட்களில் ஆய்வு செய்தார்.

**சென்னை எழிலகத்தில் இயங்கும் மாநில அவசர கால செயல்பாட்டு மையம் ஆய்வு ( அக்டோபர் 4), சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்ட முன்னேற்பாட்டு பணிகள் ஆய்வு ( அக்டோபர் 5), முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வு ( அக்டோபர் 8), ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு, பக்கிங்காம் கால்வாய் முகத்துவாரத்தில் தூர்வாரும் பணிகளைப் பார்வையிடுதல், சென்னை அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தில் ஆய்வு (அக்டோபர் 13), முதலமைச்சர் அவர்கள் ஒருங்கிணைத்த கூட்டத்தில் பங்கேற்பு (அக்டோபர் 14) என மழைக்காலப் பணிகளையே நோக்கமாகக் கொண்டு இயங்கி வருகிறார் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள். முன்கள வீரராய் வலம் வந்து வருகிறார் துணை முதலமைச்சர் அவர்கள்.**

மழைக்காலத்தில் மக்களைக் காப்பது அரசின் பணி மட்டுமல்ல, கழகத்தின் பணி என்பதையும் உணர்ந்த முதலமைச்சர் அவர்கள், “பருவ மழையை எதிர்கொண்டு மக்களுக்கு உதவிட கழக நிர்வாகிகள் அனைவரும் தயார் நிலையில் இருக்கவும்” என்று தி.மு.க. தலைமைக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**எந்நாளும் மக்கள் அரசாக, மக்களைப் பாதுகாக்கும் அரசாக, மக்களைக் காக்கும் அரணாக தி.மு.க.வை வழிநடத்தும் தலைமையாக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2024) எழிலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில், வடகிழக்குப் பருவ மழையினை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், கூடுதல் தலைமை செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சிகரெட் லைட்டர்கள் தயாரிப்புக்கான உதிரி பாகங்கள் இறக்குமதிக்கும் தடை!

## ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயலுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

### ‘சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் கழிவுகளும் குறையும்’ என கருத்து!

**சென்னை, அக்.16-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் விடுத்த வலைதளப் பதிவொன்றில், சிகரெட் லைட்டர்களின் தயாரிப்புக்கான உதிரிபாகங்களின் இறக்குமதிக்கும் தடை விதித்துள்ள ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயலுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு: -

எனது கோரிக்கைகளை முழுமையாக ஏற்று, ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய - 20 ரூபாய்க்குக் குறைவான பிளாஸ்டிக் சிகரெட் லைட்டர்களுக்குக் கடந்த ஆண்டு தடை விதித்ததைத் தொடர்ந்து, தற்போது சிகரெட் லைட்டர்களின் தயாரிப்புக்கான உதிரிபாகங்களின் இறக்குமதிக்கும் தடைவிதித்துள்ளமைக்காக ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயல் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முடிவு வரவேற்புக்குரியது.

இதனால் தமிழ்நாட்டின் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் வலுப்பெறுவதுடன், சுமார் ஒரு லட்சம் பேரின் வேலை வாய்ப்புகள் பாதுகாக்கப்படும். மேலும், சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் கழிவு களும் குறையும்.

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### நாளேடு தவறான செய்தி! அரசியல் முகவரியற்ற சிலரின் தவறான கூற்று!

## பொது விநியோகத் திட்டத்தில் துவரம் பருப்பு - பாமாயில் தட்டுப்பாடின்றி வழங்கப்படுகிறது!

### உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திட்டவட்டம்!

*சென்னை, அக்.16 -*

*தமிழ்நாட்டில் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் தொடந்து தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருகிறது - ஒரு நாளேட்டில் வந்த செய்திக்கும் அரசியல் முகவரியற்ற சிலரின் தவறான கூற்றிற்கும் பதிலளித்து உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள், குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சிறப்புப் பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் கடுமையான நிதி நெருக்கடியிலும் விலை மாற்றம் ஏதுமின்றி துவரம் பருப்பு கிலோ ரூ.30/- மற்றும் பாமாயில் பாக்கெட் ஒன்றிற்கு ரூ.25/- என்ற விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிட இத்திட்டத்தினை நீட்டித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஜூலை 2024 மாதத்தில் ஆணையிடப்பட்டது.*

*அதன்படி, அக்டோபர் 2024, நவம்பர் 2024 மற்றும் டிசம்பர் 2024 ஆகிய மூன்று மாதங்களுக்குத் தேவையான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் பாக்கெட்டுகள் ஆகியவற்றைத் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்காக 10.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குத் தேவையான 51,000 மெ.டன் கனடா மஞ்சள் துவரம் பருப்பு குறைந்த விலைப்புள்ளி அளித்த 5 ஒப்பந்ததாரர்களுக்கும் 6 கோடி பாமாயில் பாக்கெட்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த 4 ஒப்பந்ததாரர்களுக்கும் 16.09.2024 அன்று கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டன. அவர்களிடமிருந்து பருப்பும் பாமாயிலும் பெறப்பட்டுக் கிடங்குகளுக்குத் தொடர்ந்து நகர்வு செய்யப்பட்டு வருகிறது.*

*கனடா மஞ்சள் பருப்பானது 2012 ஆம் ஆண்டு முதல் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இப்பருப்பில் புரதச்சத்து மற்றும் ஊட்டச்சத்து மற்ற இதர பருப்புகளைவிட கூடுதலாகத்தான் உள்ளது என ஆய்வில் வேளாண்மை பல்கலைக்கழகத்தால் கண்டறியப்பட்டுள்ளது.*

*தனியார் ஒருவர் தொடர்ந்த வழக்கில், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற ஆணை எண். 2377/2023 நாள்.03.03.2023ன் படி “Saving that money was the vision of the Cabinet when they had stated that either Canadian Yellow Lentil or Tur Dal could be purchased and had given the choice to the Committee which invited the tender” என*



*தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மூன்று மாதங்களுக்குத் தேவையான கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்ட நிலையில் 01.10.2024 அன்றைய தேதியில் கிடங்கில் 9,324 மெ.டன் துவரம் பருப்பும் நியாய விலைக் கடைகளில் இருப்பு 6,044 மெ.டன் துவரம் பருப்பும் இருப்பு இருந்தன. அக்டோபர் மாத ஆரம்பத்தில் இருந்த மொத்தக் கையிருப்பு பருப்பு 15,368 மெ.டன் ஆகும்.*

*அக்டோபர் 2024 மாதத்திற்கு மொத்த ஒதுக்கீடு 20,750 மெ.டன் ஆகும்.*

*மொத்த ஒதுக்கீட்டில் 7,679 மெ.டன் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுவிட்டது. 14.10.2024 தேதியில் நியாய விலைக் கடைகளில் இருப்புள்ள 8,065 மெ.டன் துவரம் பருப்பு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, கிடங்குகளில் இருப்பு உள்ள 5,115 மெ.டன் துவரம் பருப்பு கடைகளுக்கு நகர்வு செய்யப்பட்டு வருகிறது. எனவே, அக்டோபர் 2024 மாதத்திற்கான மொத்த ஒதுக்கீட்டில் விநியோகம் செய்யப்பட்ட 8,065 மெ.டன் போக கிடங்கு மற்றும் நியாய விலைக் கடைகளில் உள்ள 13,180 மெ.டன் இருப்பானது மீதமுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப் போதுமானதாக உள்ளது.*

*மேலும், நவம்பர் 2024 மாதத்திற்கான துவரம் பருப்பு விநியோகத்தினைத் துரிதப்படுத்த தினமும் துவரம் பருப்பு ஒப்பந்ததாரர்களிடம் ஆய்வுக் கூட்டமும் கொள்முதல் ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் ஆலைகள் மற்றும் கிடங்குகளிலும் ஆய்வுகள் உயர் அலுவலர்களால் நடத்தப்பட்டும் வருகின்றன.*

*ஆதலால், நாளேடு ஒன்றில் குறிப்பிட்டிருப்பது போன்று துவரம் பருப்பு விநியோகத்தில் எவ்விதத் தட்டுப்பாடும் இல்லை. அரசியலில் முகவரியில்லாமல் இருக்கும் சிலர் தங்கள் இருப்பைக் காண்பிக்கக் கூறும் தேவையில்லாத கருத்துகளில் உண்மை ஏதும் இல்லை என்பது துவரம் பருப்பினைப் பெற்று வரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு நன்றாகத் தெரியும்.*

*தீபாவளிக்கு மட்டுமல்ல வருகின்ற மாதங்களிலும் குடும்ப அட்டைதாரர்கள் எவ்விதச் சிரமமுமின்றி துவரம் பருப்பு மற்றும் பாமாயிலைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.*



மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் 94 – வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், நேற்று (15.10.2024) சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.